Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 7 (9-11-65) இதழ் 270

விசுவாவசு ஐப்பசி 24 றஜபு பிறை 14 செவ்வாய்க்கிழமை

## ஜப்பானிய முறையில் நெல் விதைப்பதில் புதிய சாதனை

வவனியா, திங்கள் வவனியாவில் பல இடங்களில் அதிக உணவு உற்பத்திக்கு ஊக்கம் காட்டும் நோக்கமாக வவனியாவில் சாதனை முறையில் இவ்வியக்கம் விஸ்தரிக்கப்பட்டு மிகவும் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துள்ளது. இவ்வியக்கத்தை வவனியா விவசாய இலாகா உத்தியோகத்தர்கள், ஏனைய அரசாங்க இலாகா உத்தியோகத்தர்களின் உதவியோடும் பாடசாலை ஆசிரியர்களின் உதவியோடும் நடத்திவருகின்றனர். இத்திட்டத்தில் ஜப்பானிய முறைப்படி நாற்று நடல், ஜப்பானிய முறைப்படி களைகட்டல், நிரையில் விதைத்தல், புல் பிடுங்கல் ஆகியனவும் இடம்பெற்றுள்ளது.

### குடியிருப்பில்

வவனியா சி. எம். எஸ். பாடசாலை மாணவர்கள், குடியிருப்பிலுள்ள நெல் வயல்களில் 4 ஏக்கர் நிலத்தில் ஜப்பானியமுறைப்படி நெல் விதைத்து புதிய சாதனையை நிலைநாட்டினார்கள். இவ்விழாவில் வவனியா உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. பொ. கனகநாயகம் இவ்வியக்கம் பற்றிச் சொற்பொழிவாற்றினார். அப்பொழுது அவர் பேசுகையில் ''நாட்டின் உற்பத்தியை நாம் கூட்டினால் எமது உணவுப்பிரச்னை தீருமென்றும், பாடசாலைப் பிள்ளைகள் சிறுவயதில் வேலைசெய்து பழகினால் அவர்களின் எதிர்காலம் நல்ல முறையில் வரும்'' என்றார்.

பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. பஸ்தியாம் பிள்ளை இவ்வியக்கம் பற்றி மாணவர்களுக்கு விரிவாக எடுத்துக்கூறினார்.

### வெளிக்குளத்தில்

வவனியா வெளிக்குளத்தில் ஆசிகுள உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. நாகரத்தினத்தின் தலைமையில் மாணவர்கள் நிரையில் நெல் விதைத்தார்கள். இவ்விழாவுக்கு வவனியா விவசாயப் போதனாசிரியர் திரு. வி. நடராசா தலைமைதாங்கினார்

### பூவரசங்குளத்தில்

பூவரசங்குளத்தில் அண்மையில் பாடசாலை மாணவர்கள் வயலில் களைபிடுங்கினார்கள். இவ்விழா வவனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். நடேசன் தலைமையில் ஆரம்பமாகியது,

### தாண்டிக்குளத்தில்

வவனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் விவசாய விஞ்ஞான ஆசிரியர் திரு. க. சுந்தரலிங்கம் தலைமையில் தாண்டிக்குளத்து வயல்வெளியில் உள்ள புல் பூண்டுகள் யாவற்றையும் பிடுங்கினார்கள் இவ்வைபவத்தை பாடசாலை அதிபர் திரு இராசநாயகம் கவனித்து வந்தார் விழாவை திரு அருந்தவநாதனும் விவசாயப் போதனாசிரியர் திரு தம்பியப்பாவும் கூட்டாக ஆயத்தம் செய்து இவ் இயக்கம் வெற்றிபெற சகல வேலைகளையும் கவனித்து வந்தனர்

### பூந்தோட்டத்தில்

வவனியாவில் உள்ள பூந்தோட்டக் கிராமத்தில் உள்ள 10 ஏக்கர் நிலத்தில் களை யாவற்றையும் வவனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் நேற்று பிடுங்கினார்கள் இவ்விழாவிற்கு வவனியா விவசாய போதனாசிரியர் தலைமை தாங்கினார் பாடசாலைப் பிள்ளைகளுக்கு இந்த இயக்கத்தின் நோக்கம் பற்றி கூறினார்

## பிரதமரை பேட்டிகாண முடிவு

யாழ்ப்பாணம், செவ் சிங்களச் சட்டத்தால் வேலையிழந்த அரசாங்க ஊழியர்கள், தங்கள்பிரச்னை சம்பந்தமாக பிரதமர் டட்லி சேனநாயக்காவை பேட்டிகாண முடிவு செய்துள்ளார்கள்.

பிரதமருக்கு அவர்கள் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில், விரைவில்பேட்டிகாண சந்தர்ப்பம் அளிக்கும்படி கேட்டுள்ளார்கள்.

அம்மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது: காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா சிங்கள மொழிச்சட்டத்தை அமுல் செய்வதில் பழைய அரசாங்க ஊழியர்களுக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படாதெனத் தெரிவித்திருந்தார். ஆனால் அவரின்பின் ஆட்சிக்கு வந்த திருமதி பண்டாரநாயக்கா கணவனின் கொள்கையைப் பின்பற்றி வருவதாகக் கூறி, அவரின் கொள்கைக்கு மாறாக நடந்து கொண்டார். குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டுமென்றும், அப்படி பெறாதவர்கள் 63-ம் ஆண்டு டிசம்பர்மாதத்திற்குள் கட்டாயஓய்வில் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்படுவர் என்றும் சுற்றுநிருபம்மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை நாம் ஒரு பயமுறுத்தலாகவே கருதியிருந்தோம்.

பழைய அரசாங்க ஊழியர் என்ற ரீதியில் நாங்கள் உத்தியோக மொழிச்சட்டத்தின்கீழ் வரவில்லை. ஆனால் அரசாங்க ஊழியர் என்ற முறையில் அரசாங்கத்தின் கொள்கையை அமுல் நடத்துவதற்காகக் கோரப்பட்டோம். பிரதானமாக தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கிணங்க அரசாங்கத்தினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட மொழிச் சட்டத்தை ஏற்க நாங்கள் தயங்கினோம்.

இக்காரணமாக பழைய அரசாங்க ஊழியர் பிரச்னை ஒரு மொழிப்பிரச்னையல்ல. அது ஒரு நிர்வாகப் பிரச்னையும்கூட.

அரசியல் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டகண்கொண்டு இப்பிரச்னைக்கு சுமுகத்தீர்வு காணும்படி வேண்டுகின்றோம்.

## இருதய சிகிச்சையில் மகத்தான சாதனை

## இரண்டரை மணிநேரம் இருதயமில்லாதிருந்த சிறுமி

### யாழ். ஆஸ்பத்திரியில் நிகழ்ந்த அதிசயம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் டாக்டர் ஒருவர் மகத்தான சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளார். பன்னிரண்டு வயதுச் சிறுமியின் இருதயத்தில் தொற்றுநோய்க் கிருமியினால் ஏற்படுத்தப்பட்ட துவாரமொன்றை அந்த டாக்டர் அடைத்து மீண்டும் இயங்க வைத்திருக்கிறார்.

இருதயத்தில் ஒருதுவாரம் ஏற்பட்டதால் பண்டத்தரிப்பைச் சேர்ந்த பரமேஸ்வரி என்னும் பன்னிரண்டு வயதுச் சிறுமியின் உடலில் ஒரு பக்கம் இயங்க மறுத்துவிட்டது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இச்சிறுமிக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இச் சிறுமியைப் பரிசோதித்த யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியைச்சேர்ந்த இருதய வைத்தியநிபுணர் டாக்டர் எஸ். ஜே. ஸ்டீபன் சிறுமியின் இருதயத்தில் தொற்றுநோய்க் கிருமிகளினால் துவாரம் ஏற்பட்டிருப்பதையும் அதுவே சிறுமியின் உடலின் ஒருபகுதி இயங்காமலிருப்பதற்குக் காரணம் என்பதையும் அறிந்து கொண்டார்.

இருதயத்தை உடலில் இருந்து வெளியே எடுத்து அதிலுள்ள துவாரத்தை அடைத்து மீண்டும் அதை உடலில் பொருத்தினால் சிறுமியின் உடல்முழுவதும் இயங்கமுடியும். இருதயத்தை வெளியே எடுத்துசிகிச்சைசெய்வதென்பது சுலபமல்ல! இதற்குப் பெற்றோரின் சம்மதத்தைப்பெறுவதும்சுலபமல்ல. தன்னம்பிக்கையிலும் தமது திறமையிலும் அசையாத உறுதியுடைய டாக்டர் ஸ்டீபன், டாக்டர் சிவரத்தினத்தின் உதவியுடன் சிறுமியின் உயிரையே பிடித்துவைத்திருக்கும் பெரும்பணியில் ஈடுபட்டார். சத்திரசிகிச்சை ஆரம்பமானது. சிறுமியின் முதுகுப்புறமாக சத்திரசிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. இருதயத்தை உடலில் இருந்துவெளியே எடுத்து, ஐஸ்பெட்டிக்குள் வைத்து, அதில் ஏற்பட்ட துவாரம் அடைக்கப்பட்டது. சிறுமியின் உடலிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட இருதயம் ஐஸ்பெட்டிக்குள் இரண்டரைமணிநேரம் வைக்கப்பட்டிருந்தது. மீண்டும் இருதயம் உடலில் அதன் இடத்தில் பொருத்தப்பட்டது. சிறுமியின் உயிர் மீண்டும் திரும்பியது. 9 மணி நேரப் போராட்டத்தின் பின்னர் மகத்தான சாதனையைப் புரிந்த திருப்தியில் டாக்டர்கள் சத்திரசிகிச்சை அறையிலிருந்து வெளியே வந்தனர் காலனுடன் போராடி மகளின் உயிரை மீட்ட டாக்டர்களை சிறுமியின் பெற்றோர் வாயார வாழ்த்தினர் இதுபோன்ற சத்திரசிகிச்சை இதுவரையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வெற்றிகரமாக நடைபெற்றதில்லையாம். சிறுமி பரமேஸ்வரி இப்பொழுதும் ஆஸ்பத்திரியிலேயே இருக்கிறார். நீராகாரம் உட்கொள்ளுகிறார்.

## 28 பேர் பலி

புதுடில்லி, நவ. 8 உத்தரபிரதேசத்தில் ஒரு பஸ். ஏரியில் விழுந்ததால் 28 பிரயாணிகள் மாண்டனர். இந்த பஸ்ஸில் 40 பேர் இருந்தனர்.

## நவீன தொழில் மடுவம் நிறுவக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய் அஸ்கிரியா, வெலோனா தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டதுபோல, குறைந்தது இரண்டுநவீன தொழில் மடுவங்களை யாவது சுன்னாகத்திலுள்ள யாழ்ப்பாணம்தச்சுத் தொழிற்சாலையில் நிறுவித் தருமாறு தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபன தொழிலாளர் சங்கம் கைத்தொழில் மந்திரியைக் கேட்டுள்ளது.

கைத்தொழில் மந்திரி திரு. பிலிப்குணவர்த்தனாவுக்குதொழிற்சாலைத்தொழிலாளர் யூனியன் காரியதரிசி திரு. வி. ரி. தர்மலிங்கம் சமர்ப்பித்த மகஜரில் மேலும் கூறப்படுவதாவது:

''அளவு குறிக்கும் இயந்திரம் ஒன்றுஅவசியம் எமக்குத் தேவைப்படுகிறது. எங்களிடம் அரிவு இயந்திரம் இல்லாததால், மரங்களை அரிவதற்காக மாதந்தோறும் போக்குவரத்துச் செலவு தவிர்த்து 3000ரூபா செலவு செய்யப்படுகிறது. இதைத் தவிர்க்க தொழில் மடுவத்தில் ஒரு அரிவு இயந்திரத்தை நிறுவித் தருமாறு கார்ப்பரேஷனுக்கு ஆலோசனை கூறுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தொலைபேசி இணைப்பும் தொழிற்சாலைக்கு அவசியமாகத் தேவைப்படுவதால் அதனையும் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்''

## பல்கலைக்கழகம் அடுத்த ஆண்டிலாவது வேண்டும்

### உடுப்பிட்டி எம். பி. கோரிக்கை

உடுப்பிட்டி, திங்கள் ''பண்டிதர்சைவப் புலவர்களுக்கு இதுவரையில் வேலைவாய்ப்புகள்கிடைக்கவில்லை. நாங்கள் அடிமைளாயிருந்த காலத்தில் இருந்த கல்வி இலாகாதான் இன்றையஅரசாங்கத்திலும் செயலாற்றுகிறது. கல்விப் பகுதியைப் பொறுத்தவரையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. பண்டிதர்களின்சம்பளத்தை உயர்த்தும்படி கோரியதையும் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை'' என்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் அல்வை சின்னத்தம்பிப்புலவர் வித்தியாலயத்தில் நடைபெற்ற வாணி கலைக்கழக ஒன்பதாவதாண்டு நிறைவு விழாவில் பேசுகையில் கூறினார்.

பண்டிதர் சோ. இளமுருகனார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. தொடர்ந்து பேசியதாவது:

இந்தஆண்டு பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் சித்தியெய்திய தமிழ் மாணவர்கள் அனைவரும்பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம் பெறமுடியாமல் கொழும்பு குதிரைப்பந்தய மைதானத்தில் படிக்கவேண்டியிருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் காலியிலும் புதிய பல்கலைக் கழகக் கிளைகளை நிறுவுங்கள் என்று கூறியபோது அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. இதனால் இன்றுநமது தமிழ்ப் பெண்கள் கொழும்பில் அலைகின்றார்கள் யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரியில் ஓர் கிளைப் பல்கலைக்கழகத்தை அமைத்திருந்தால் நமதுபெண்கள்வீட்டிருந்தே தினமும்படிக்கச்சென்றுவருவார்கள் தமிழ்ப் பண்பும் பாதுகாக்கப்படும். இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தின்கிளையொன்று ஸ்தாபிக்கப்பட்டே ஆகவேண்டும். தமிழ்மக்கள் கல்விகற்றுவிட்டு வேலையில்லாமல் இருப்பது சிறப்பு. வேலை கிடையாது என்பதற்காகப் பல்கலைக்கழகப் படிப்பை உதாசீனம் செய்யக்கூடாது.

பண்டிதர் திரு சோ இளமுருகனார் பேசுகையில்'வறுமையில் வாடி—புத்தகங்கள் வாங்கக்கூட வழியில்லாமல் இருக்கும் பண்டிதர்களின் சம்பளப் பிரச்னைபற்றித் தமிழ்ப் பிரதிநிதிகள் கவனிக்கவேண்டும். இக்காலத்தில் கல்லூரிகளில் இலக்கணக்கல்வி இல்லாமல் இருக்கிறது. இதனால் செந்தமிழ் மாறி கொடுந்தமிழும்கொச்சைத்தமிழும்வளர்ச்சியடைகின்றன. தொடர்ந்து 26 ஆண்டுகளுக்குஇந்நிலைநீடித்தால் செந்தமிழ்ப் பிரதேசமான யாழ்ப்பாணம் வேறுவிதமாக மாறிவிடும்.

பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்ததும்மாணவர்கள் புத்தகங்களை மூட்டைகட்டி வைத்துவிடுகிறார்கள். பட்டங்கள் கிடைத்ததும் படிப்பை மறந்துவிடுகிறார்கள். இதனால் வேலைகிடைக்கும்நேரத்தில் தராதரமற்றவர்களாகத் திண்டாடுகிறார்கள். எப்பொழுதும் படித்துக்கொண்டே இருக்கும் பண்பு வளரவேண்டும். யாழ்ப்பாணத்தில் தமிழ் படித்தவர்களும் பயன் பெறக்கூடிய நல்லதோர் வாசிகசாலை இல்லை. இதை ஆக்குவதிலும் தமிழ் பிரதிநிதிகள் கவனஞ் செலுத்த வேண்டும்

இரசிகமணி கனக. செந்திநாதன் பேசுகையில் '6-ம் வகுப்புப் புத்தகமான தமிழ்

(6-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

'என்னுடையது', 'உன்னுடையது' என்ற இன் சொற்களே சகல தீமைகளுக்கும் கருவாகும்.

— யோன் கிறிஸ்தோத்தம்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily' Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 24 உ (9-11-65)

## பொலிஸ் விசாரணைக் கமிஷன்

இன்னும் இரண்டு வாரங்களுக்குள் பொலிஸ் விசாரணைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்படும் என்று ராஜாங்க மந்திரி சென்றவாரம் பார்லிமெண்டில் தெரிவித்தார். இதைப் பொலிஸாரும் பொதுமக்களும் நிச்சயம் வரவேற்பர்.

பொலிஸார் இந்நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்புள்ளவர்கள். நாட்டின் ஜனத்தொகை பெருகி வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்து வருகிறது. வாழ்க்கைச் செலவும் உயர்ந்துள்ளது. இதனால் நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. குற்றச்செயல்களைத் தடுப்பதும், குற்றம் புரிபவர்களைக் கண்டு பிடித்துத் தண்டனை பெற்றுக் கொடுத்து குற்றச்செயல்கள் பரவாமல் தடுப்பதும். இதன்மூலம் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதும் பொலிஸாரின் கடமை. பத்தாயிரம் பேரைக் கொண்டதுதான் இலங்கையின் பொலிஸ்படை. இது இந்நாட்டின் ஜனத்தொகையுடன் ஒப்பிடுகையில் போதிய பலமுள்ள படையெனக் கருத முடியாது. இதனால் தான் பொலிஸார் சில சமயங்களில் தாங்களே தண்டனையளிக்கும் அதிகாரத்தையும் எடுத்துக் கொள்கிறார்களோ வென்றுகூடக் கருதத் தோன்றுகிறது. பொலிஸாரின் சம்பளவிகிதமும் இன்றையகால நிலைக்கு ஏற்றதாக இல்லையென்று கூறலாம். பொலிஸ் விசாரணைக்கமிஷன் ஒன்று இருபது வருடங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டது. அதன்பின்னர் பொலிஸாரின் சம்பளவிகிதம்பற்றியோ அவர்களின் வாழ்கை நிலைபற்றியோ ஆராயப்படவில்லை. பொலிஸாருக்குப் பல குறைகள் இருக்கிறதென்பதும் உண்மையே. பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய அவர்களுக்கு அவர்கள் தங்களையே பாதுகாத்துக் கொள்ளும் வரயப்புக் குறைவுதான். வாழ்க்கை வசதிகள் குறைவாக இருப்பதால்தான பொலிசாரிடம் லஞ்ச ஊழல்களும் இடம்பெறுகின்றன. எனவே பொலிஸாரின் சம்பளவிகிதம், வாழ்க்கை நிலைபற்றி ஆராய்ந்து அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டியது அவர்களுக்கு மட்டுமல்லாது நாட்டின் சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படுவதற்கும் அவசியமாகும்.

அரசாங்கம் நியமிக்கவிருக்கும் பொலிஸ் விசாரணைக்கமிஷன் பொலிஸாரின் சம்பள விகிதம் மற்றும் அவர்களுடைய வசதிக் குறைவுகளை மட்டும் ஆராயாமல், பொதுமக்களிடம் அவர்கள் நடந்து கொள்ளும்முறை பற்றியும் ஆராய வேண்டும். சமீபகாலத்தில் பொலிஸாருக்கெதிராகப் பொதுமக்கள் தெரிவிக்கும் புகார் அதிகரித்துள்ளது. பொதுமக்கள்குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ளவர்கள்மீது, சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு என்ற போர்வையில், பொலிஸார் சிலர் மிருகத்தனமாக நடந்து கொள்கின்றனர். பார்லிமெண்ட் பிரதிநிதிகள் கூட பொலிஸாரின் தாக்குதல்களுக்கும் அவமரியாதைக்கும்உட்பட்டிருக்கின்றனர். இவை பற்றிப் பார்லிமெண்டிலேயே பல தடவைகளிலும் புகார் கூறப்பட்டுள்ளது. பொலிஸாரின் இச்செயல்களுக்கு யார் காரணம்? மேலிடத்து உத்தரவுகள் ஏதுவும் இருந்ததா? 1956-ம் ஆண்டிலும் 1958-ம் ஆண்டிலும் தென்னிலங்கையில் கலகம் ஏற்பட்ட போது பொதுமக்களைக் காடையர்கள் தாக்கிய போதும், கடைகள், வீடுகள் சூறையாடப்பட்ட போதும் பொலிஸார் உதவி செய்யாது பார்த்துக் கொண்டிருந்தது ஏன்? நீதிமன்றத்தில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களும், நீதிபதிகளினால் எச்சரிக்கை செய்து பொலிஸ் அதிபருக்கு அறிவிக்கப்பட்டவர்களும் கூடத் தொடர்ந்து சேவையிலிருக்க அனுமதிக்கப்பட்டிருப்பது ஏன்? இவை பற்றியும் விசாரணைக்கமிஷன் ஆராயவேண்டியது அவசியம். மேலிடத்து உத்தரவுகளுக்கு இணங்க பொலிஸார் சிலசமயங்களில் நடந்திருந்தால் பொலிஸார்மீது குறை கூறுவது, எய்தவனிருக்க அம்பை நோவதையொக்கும்.

இப்பொழுது சில பொலிஸாரின் மிருகத்தனமான நடவடிக்கைகளினால் பாதிக்கப்படும் மக்கள், தங்கள் புகார்களை பொலிஸாரிடமேதான் முறையிடவேண்டியுள்ளது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க உதவிபுரியாது. பொலிஸாருக்கு எதிரான புகார்களைப் பொதுமக்கள் தெரிவிப்பதற்கு நிரந்தரக் கமிஷனொன்று நியமிப்பது சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவர்களிடமிருந்தே அவற்றைப் பாதுகாக்க அதிக உதவுவதாக இருக்கும். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்யும் பொறுப்பு இப்பொழுது அந்தந்தப் பகுதிப் பொலிஸாரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் சிலசமயங்களில் மோசடி நடைபெறவும் வாய்ப்புண்டு. நீதியரசர்கள் இத்தகைய மோசடிகளை நாசூக்காகச் சில வழக்கு விசாரணைகளில் சுட்டிக்காட்டியும் இருக்கின்றனர். வழக்குத் தாக்கல்செய்யும் பொறுப்பை குறிப்பிட்ட சில அதிகாரிகளிடம் ஒப்படைப்பதன் மூலம் ஊழல் மோசடிகளைத் தவிர்க்கலாம். இவை பற்றியும் பொலிஸ் விசாரணைக் கமிஷன் ஆராயவேண்டும்.

## ஜனத்தொகை பெருக்கம்; உணவு உற்பத்தி மந்தம்

யாழ்ப்பாணம், திங்கள்

''புகழ்பெற்ற கிறீஸ் நகரத்தையும் சிறப்பான ரோம் தேசத்தையும் நாம் பின்பற்றவேண்டுமானால், மாணவர்கள் தங்களை எதிர்நோக்கும் பிரச்னைகளிலிருந்து விலகி ஓடிக்கொள்ளக் கூடாது'' என்று சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி ஆண்டு விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவி கமத்தொழில் அதிபர் திரு. கே. சிற்றம்பலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய திரு. சிற்றம்பலம் குறிப்பிட்டதாவது:-

''நான் இக் கல்லூரிகல் படிக்கும்பொழுது தற்பொழுது மாணவர்களிடையே காணப்படும் சில பழக்கவழக்கங்கள் இருக்கவில்லை, இதனால் எதிர்நோக்கும் ஆபத்துக்களை மாணவர்கள் மறந்துவிடக் கூடாது.

கடந்த இருபது ஆண்டுகளுக்குள் இலங்கையின் ஜனத்தொகை பெருகியுள்ளது. ஆனால் அதற்கேற்ப உணவு உற்பத்திப் பெருக்கம் இடம்பெறவில்லை. ஜப்பானியர் ஒரு ஏக்கரில் 100 பறை நெல் சாகுபடி செய்கின்றனர். ஆனால் இங்கே நாங்கள் செய்யக்கூடிய வசதிகள் இருந்தும் 35 பறையே சாகுபடிசெய்கின்றோம். இளம்பெண்களும் வாலிபர்களும்பேனைபிடித்து எழுதும் வேலையைவிட்டு கமத்தொழிலில் ஈடுபட வேண்டும்.

வலி. மேற்கு காரியாதிகாரி திரு. என். மாணிக்க நடராசா, திரு. ஏ. எம். ஸ்பென்சர் ஆகியோரும் பேசினர்.

மன்றத்தலைவர் திரு. கே. திலகநாதன் தலைமைவகித்தார்.

## எழுத்தாளர் யார்?

### நூல் வெளியீட்டு விழாவில் கலையரசு

யாழ்ப்பாணம், திங்கள்

''மேடையிலேறிக் கூத்தாடுபவர்களையெல்லாம் நடிகர்களென்று நாம் சொல்லிவிட முடியாது. அதுபோல பேனை தூக்கி எழுதுபவர்களையெல்லாம் எழுத்தாளர்கள் என்று கணித்துவிடக் கூடாது. சமூகத்தின் குறைபாடுகளை ஏதோ ஒருவகையில் படம் பிடித்துக்காட்டக்கூடியவர்களே உண்மையான எழுத்தாளர்களாக முடியும். இந்த வரிசையில 'கொழும்புப் பெண்' நகைச்சுவைத் தொகுதியை வெளியிட்டுள்ள இளைஞர் பொ. சண்முகநாதனைச் சேர்த்துக் கொள்ளலாம்.''

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபுத்தக வெளியீட்டு விழாவொன்றில் கலையரசு சொர்ணலிங்கம் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. பொ. சண்முகநாதன் எழுதிய 'கொழும்புப் பெண்' வெளியீட்டு விழா ஆசிரியர் திரு. குலரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது கலையரசு சொர்ணலிங்கம் மேலும் பேசுகையில், திரு. சண்முகநாதனின் நகைச்சுவைத் தொகுதியில் அன்றாடமனித வாழ்க்கையில் இடம்பெறும் எத்தனையோ விஷயங்கள் எழுதப்பட்டுள்ளதென்றும் இது சமுதாயத்திலேயுள்ள குறைபாடுகளை அகற்றுவதற்கு ஏற்றமுறையில் எழுதப்பட்டிருக்கிறதென்றும் சொன்னார்.

நகைச்சுவை எழுத்தாளர் திரு. ரீ. பாக்கியநாயகம் பேசுகையில், மனித வாழ்க்கையில் பிரச்னையில்லாதவர்களே கிடையாதென்றும், அப்படியான பிரச்னைகளை ஓரளவு மறந்திருப்பதற்கு நகைச்சுவை இலக்கியம் உதவுகிறதென்றும் கூறினார்.

ஈழத்துப் பத்திரிகைகள் சிறுகதை, கட்டுரை ஆகியவற்றிற்கு இடமளிப்பது போன்று நகைச்சுவை இலக்கியத்துக்கும் நல்ல இடமளிக்கவேண்டுமென்றும் திரு. பாக்கியநாயகம் தமது உரையில் தெரிவித்தார்.

திரு. ஆலாலசுந்தரம் பேசுகையில், இலக்கியம் ஒரு லட்சிய நோக்கத்தோடு படைக்கப்படவேண்டுமென்றும் திரு. சண்முகநாதனின் நகைச்சுவைக் கட்டுரைகள் சிரிப்புக்கும் சிந்தனைக்கும் விருந்தாக அமையப்பெற்றவையென்றும் சொன்னார்.

திரு. சொக்கன் பேசுகையில், மற்ற இலக்கியம் போன்று நகைச்சுவை இலக்கியம் காலத்தால் சாகாதவையென்று குறிப்பிட்டார்.

திரு. தேவன் பேசுகையில், சோகத்திலிருந்து எழுவதுதான் நகைச்சுவையென்று கூறினார்.

யாழ். மேயர் திரு. எஸ். ஸி. மகாதேவா தொடக்கவுரை நிகழ்த்தினார். திரு. வே. க. இராசலிங்கம் 'கொழும்புப் பெண்' முதல் பிரதியை வாங்கினார். திரு. சி. சரவணபவன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு பொ. சண்முகநாதன் நன்றியுரை கூறினார்.

## மந்திரிக்கு எம். பி. பாராட்டு

கிளிநொச்சி, திங்கள்

பூநகரியில் சூருவளியினால் கடல்நீர் புகுந்து அழிக்கப்பட்ட வயல்களைத் திருத்துவதற்காக அரசாங்கம் 10 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்தப் பணத்தை ஒதுக்குமாறு மந்திரிசபையிடம் வேண்டியதற்கிணங்க நடவடிக்கைகளை விரைவாக எடுத்ததற்காக கமத்தொழில் மந்திரி திரு. எம். டி. பண்டாவிற்கும் கமத்தொழில் மந்திரி காரியாலயத்தின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவாவிற்கும் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் நன்றி தெரிவித்து ஒரு பாராட்டுக்கடிதம் எழுதியுள்ளார்.

## ஐயாறன் எழுதுவது

இன்று கொழும்பிலே ஓர் 'அமிர்த மகோற்சவம்' நடைபெறுகின்றது. அப்படி என்றால் என்ன தெரியுமா? எழுபதாவது ஜயந்தி விழாவுக்கு இந்து சம்பிரதாயப்படி அப்படிச் சொல்வதாம். 'ரிலிஜியஸ் டைஜஸ்ட்' என்ற ஆங்கில சமய மஞ்சரி, 'ஆத்மஜோதி' இவற்றின் ஆசிரியரான கே. ராமச்சந்திரா அவர்களின் 70வது ஆண்டு நிறைவுவிழா இன்று மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவிலில் நடைபெறுகின்றது. அபிஷேக பூசை, கூட்டுப்பிரார்த்தனை இவற்றுக்குப் பின், இரு ஞாபகார்த்த நூல்களை முன்னாள் தர்மபரிபாலகர் திரு. வி. எப். குணரத்னா அவருக்குக் காணிக்கையாக அளிப்பாரென்று ஓர் அறிவிப்பைப் பார்த்தேன்.

பத்தாண்டுகளுக்கு முன்பாக அவரது 60வது ஜயந்தி விழா. கொழும்பு ஜிந்துப்பிட்டி எனும் ஜயந்திநகர் கோயிலில் நடந்தவைபவங்கள் இச்சமயம் என் நினைவுக்கு வருகின்றன. ஆறுமுகப்பெருமானை எழுந்தருளச்செய்து, சண்முக அர்ச்சனை நடைபெற்றதுடன் பலரும் அப்பெரியாரின் சேவைகளையும், குணநலன்களையும் பற்றிப் பாராட்டி வாழ்த்தினர்.

அந்த வாழ்த்துக்கள் வீண் போகவில்லை. சென்ற 10 வருடங்களிலே அவரது சேவையும், புகழும் உலகின் பல நாடுகளிலும் பரவியது. சர்வ சமரசத்துக்காகவும், மனிதர் உய்வதற்காகவும் அவரை ஆசிரியராகக்கொண்ட 'ரிலிஜியஸ் டைஜஸ்ட்' உலகில் செய்துவரும் பணியை பல ஐரோப்பியரும்பாராட்டியுள்ளனர். அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் முதலிய பல நாடுகளுக்கும் அவர் நேரில் சென்று ''மேன்மை கொள் சைவ நீதியை'' பரப்பியுள்ளார். இந்து மதத்தைப் பற்றி உலகில் பரவியிருந்த தப்பெண்ணங்களை நீக்கி அதன் பெருமையைப் பலரும் அறியச்செய்துள்ளார். நயினை நாகபூஷணி அம்மையின் அருள்பெற்ற திருநெறிச் செல்வரான இந்தப் புதல்வர் நீடூழி வாழ்க;

ஃ ஃ ஃ

பிலிப்பைன்ஸ் மொழியிலே என்னென்ன தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன? இந்தோனேஷியாவிலே சைவசித்தாந்தம் பரந்திருந்ததற்கு என்னென்ன அத்தாட்சிகளுள்ளன? தாய்லாந்திலே திருவெம்பாவை இன்றும் பாடப்பட்டுவருவது உங்களுக்குத் தெரியுமா? இவைபற்றியும், தமிழரின் பண்பாடு வெளிநாடுகளிலும் பரவியிருந்த ருசியான விவரங்களைக் குறித்தும் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா? வருகிற ஏப்ரல் மாதத்திலே கோலாலம்பூரில் நடைபெறும், சர்வதேச தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மகாநாட்டிலே பல அறிஞர்களும் இதைப்பற்றி அறிவுரைகளைச் செய்யப்போகிறார்கள்.

இம்மகாநாடு பற்றி அச்சிட்ட மூன்றாவது செய்திக் கடிதமொன்று கிடைத்தது. அதில் பல ருசியான விவரங்களைக் கண்டேன். செக் மொழியிலே நமது சிலப்பதிகாரம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாம். ஆங்கிலத்திலும் இது வெளியாகியுள்ளது.

இதுவரை இம்மகாநாட்டுக்குப் பல அறிஞர்கள்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

தமிழைப் பற்றியும், தமிழ் நாகரிகம் குறித்தும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை அனுப்பியுள்ளனர். இவற்றில் பல இலங்கையிலிருந்து சென்றுள்ளன. அக்டோபருடன் கட்டுரை அனுப்பும் தேதி முடிவடைந்துவிட்டதெனினும், டிசம்பர்கடைசி வரை, விசேஷ கட்டுரைகளை அனுப்பலாமென்று தெரிவிக்கின்றனர்.

இம்மகாநாடு பற்றிய பல விவரங்களையும் பேராசிரியர் தனிநாயக அடிகளார் வருகிற வியாழக்கிழமை 11ந் தேதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மாலை 6-30 மணிக்கு ஆரம்பமாகும் விசேஷ கூட்டத்தில் தெரிவிப்பார்கள்; சென்ற வாரத்திலே சென்னையில் அவர் இதே விஷயமாக ஒரு கூட்டத்தில் பேசியுள்ளார். அடிகளார் ஒரு சர்வதேச தமிழ்ப்பாவலராக இருந்து பெரும் தொண்டாற்றுவது போற்றத்தக்கதாகும்.

ஃ ஃ ஃ

தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம், உமிழ்வது
போல உலகந்திரிவார்,
அவிழு மனமும் எம் ஆதி
அறிவுந், தமிழ் மண்டலம்
ஐந்துந் தத்துவமாமே.

—திருமூலர் திருமந்திரம்

# கைப்பற்றப்பட்ட காஷ்மீர் பகுதிகளை விடமாட்டோம்

## காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் சாஸ்திரி கூறியதாக தகவல்

### "யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் பாக். பிடித்த இந்திய பகுதிகளை மீட்டே தீருவோம்"

லண்டன், நவ. 8

இந்திய-பாகிஸ்தான் சண்டையின்போது காஷ்மீரில் இந்தியத் துருப்புகள் கைப்பற்றிய பகுதிகளை பாகிஸ்தானிடம் திரும்ப ஒப்படைக்க மாட்டாது என்று பிரதமர் சாஸ்திரி தெரிவித்திருப்பதாக இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

புதுடில்லியில்நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் சாஸ்திரி இந்த உறுதிமொழியை அளித்திருப்பதாக நம்பப்படுகிறது.

யுத்தநிறுத்தத்துக்குப் பின்னர் பாகிஸ்தான் துருப்புகள் கைப்பற்றிய இந்திய பிரதேசங்களை விட்டு அவர்கள் வெளியேறுவிட்டால், வெளியேற்ற வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும்பிரதமர் சாஸ்திரி கூறியதாகத் தெரிய வருகிறது.

யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் பாகிஸ்தான் துருப்புகள் கைப்பற்றிய பகுதிகளை இந்தியா மீட்டே தீரும் என்று பிரதமர் சாஸ்திரி இக்கூட்டத்தில் தெரிவித்திருந்தாராம்.

அக்டோபர்புரட்சி

## இராணுவ அணிவகுப்பில் புதிய ராக்கெட்டுக்கள்

### "எதனையும் தாக்கும்; எதிரி பிடிக்கமுடியாது"

மாஸ்கோ, நவ. 8

**அக்டோபர் புரட்சியின் நாற்பத்தெட்டாவது தினத்தைக் குறிக்கும்முகமாக நேற்று செஞ்சதுக்கத்தில் இடம்பெற்ற பிரமாண்டமான இராணுவ அணிவகுப்பில் சோவியத்யூனியனின் சக்திவாய்ந்த புதியராக்கெட்டுகள்தான்முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. இராணுவ அணிவகுப்புகள் 45 நிமிட நேரம்வரை நீடித்தது.**

அணிவகுப்புகளில் இடம்பெற்ற புதியரக ராக்கெட்டுகள் முன்னர் இங்கு இடம்பெறவில்லை என்று கூறப்பட்டது. 'அபாரசக்தி வாய்ந்தது குறிப்பானது' என்று வர்ணிச்சுப்பட்டது எதிர்த் தாக்குதலை எவ்வளவுதூரத்திலும் குறிப்பாக முறியடிக்கும் சக்தி இவற்றுக்கு உண்டென்றும் அறிவிப்கப்பட்டது. இந்த ராக்கெடுகளை எதிரிகள் தங்களது ராக்கெட்டுகளினுல் ''பிடிக்க முடியாது'' என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

காட்சியில் இடம்பெற்ற சில சிறிய ராக்கெட்டுகளை டாங்கிகள் சுமந்துகொண்டு சென்றன. பெரிய ராக்கெட்டுகளை எட்டுச் சக்கரங்கள் பொருந்திய வண்டிகள் சுமந்து சென்றன.

**எச்சரிக்கை**

இராணுவ அணிவகுப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் சோவியத் பாதுகாப்பு மந்திரி மார்ஷல் மலினேவ்ஸ்கி மரியாதை செலுத்தி அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு உரை நிகழ்த்தினர்.

''மற்றைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட்டு, சர்வதேச அரங்கில் அமெரிக்க ஏகாதிபத்தியம் பதற்ற நிலையைத் தோற்றுவித்து வருகிறது'' என்று மார்ஷல் மலினேவ்ஸகி எச்சரிக்கை செய்தார்.

''உதவிகோடும் நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்க சோவியத் யூனியன் எப்பொழுதும் தயாராக விடுக்கிறது. ஆக்கிரமிப்பாளர்களை நசுக்குவதில்ரஷ்யா என்றும் பின்நிற்க மாட்டாது என்றும் அவர் முழங்கினர்.

''தென்வியட்னுமில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடத்துகிறது. வடக்கு வியட்னுமில் அது தாக்குதல்கள் நடத்துகிறது. சமாதானத்துக்கு ஏற்பட்டுவரும் ஆபத்தும் பெருகிக் கொண்டே வருகிறது. மேற்கு நாடுகளிடமிருந்து பெறும் உதவிகளின் மூலம் பொன் அரசாங்கம் அணு ஆயுதங்களில்கைவைக்கப் பார்க்கின்றது'' என்றும் அவர் கூறினர்.

அப்பொழுது சோவியத் தலைவர்கள் லெனின் சமாதியில் நின்று கொண்டிருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. லியோநிட் பிரஸ்னேவ், பிரதமர் திரு, அலெக்ஸி கோஸிஜின் ஆகியோர் முன்வரிசையில் காணப்பட்டனர். இதனையடுத்த வரிசையில் கியூபா பாதுகாப்பு மந்திரியும் கியூபா பிரதமரின் சகோதரருமான மேஜர் ரேல் காஸ்ட்ரோ நின்று கொண்டிருந்தார்.

அணிவப்புகளில் இடம்பெற்ற டாங்கிகள் குறித்து சோவியத் செய்தி ஸ்தாபனமான ''டாஸ்'' வர்ணிக்கையில் ''சோவியத் இராணுவத்தின் புதிய யுகம்'' என்று கூறியது, (பி.டி.ஸி.)

## அமெரிக்க கொள்கையை பரப்ப லஞ்சம் கொடுத்தாராம்

### தூதர் மீது சுகர்ணே பாய்ச்சல்

ஜாகர்த்தா, நவ. 8

அமெரிக்காவின் கொள்கைகளை இந்தோனேஷியாவில் நிலைநாட்ட முன்னுள் அமெரிக்க தூதர் திரு. ஹோவோர்ட் பி. ரோன்ஸ் இந்தோனேஷியர் ஒருவருக்கு லஞ்சம் கொடுத்திருந்ததாக இந்தோனேஷிய அதிபர் சுகர்ணே குற்றம் சுமத்தியுள்ளார்.

சுதந்திர உலக சித்தாந்த கொள்கைகளை இந்தோனேஷியாவில் பரப்புவதற்கு அவர் முயற்சி எடுத்ததாக சுகர்ணே தெரிவித்தார்.

இந்தோனேஷிய மந்திரி சபைக் கூட்டத்தில் சுகர்ணே இது பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டார். பின்னர் இவரின் பேச்சு வானெலியில் ஒலிபரப்பப்பட்டது.

''முன்னுள் அமெரிக்கத் தூதர் திரு.ஜோன்ஸ் எனது நெருங்கிய நண்பர். இவர், இந்தோனேஷியர் ஒருவருக்கு 12,00,000 ஸ்டார்லிங் பணம்கொடுத்து அமெரிக்க கொள்கைகளை இங்கு நிலைநாட்ட முயன்றுர். பணத்தை பெற்றதற்கான சீட்டு எனது கையில் இருக்கிறது. ஆனுல் அந்த இந்தோனேஷியரின் பெயரை குறிப்பிட நான் விரும்பவில்லை'' என்று அதிபர் சுகர்ணே தமது மந்திரிகளிடம் தெரிவித்தார்.

''தற்பொழுது அமெரிக்க தூதராகவிருக்கும் திரு. மார்ஷல் கிறீனுடன் பேச்சுகள் நடத்திய ராஜதந்திரி ஒருவர் என்னுடன் ஒரு சந்தர்ப்பத்தில் பேசுகையில் இந்தோனேஷியாமீது புதிய தூதர் நல்லெண்ணம் கொண்டிருப்பதால் அமெரிக்க- இந்தோனேஷியா உறவில் அபிவிருத்தி ஏற்படுமோ என்று கேட்டார். அதற்கு நான் பதிலளிக்கையில்இதுபற்றி ஆலோசித்து வருவதாகசொன்னேன். சீனுவிடமிருந்து இந்தோனேஷியாவை பிரிக்க அமெரிக்கா முழுமுயற்சி யெடுத்துவருகிறது. சீனு தனித்து நின்றுல் சீனுவைத் தாக்குவது அமெரிக்காவுக்கு சுலபமாகிவிடும் என்று அமெரிக்கா கருதுகிறது'' என்று அதிபர் சுகர்ணே கூறினர்.

(பி. டி. ஸி.)

## ரொடீஷியாபற்றி பேச்சுவார்த்தை

லண்டன், நவ. 8

மந்திரி சபையிலுள்ளசிரேஷ்ட அங்கத்தவர்களுடன் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஹரோல்ட் வில்சன் ரொடீஷியாவின் தற்போதைய நிலைமைபற்றி பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தையில் மந்திரிகள், காமன்வெல்த் காரியதரிசி, சர் எல்வயின் ஜோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ரொடீஷிய பிரதமருக்கு செய்தியொன்றை அனுப்புவதென்றும்இம்மகாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது. (பி டி. ஸி.)

## தனி ஒலிம்பிக் கோஷ்டி

மாட்ரிட். நவ. 8

அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் இரு ஜெர்மன் ராஜ்யங்களும் தனித்தனி விளையாட்டுக் கோஷ்டிகளை அனுப்பலாம் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு தீர்ப்புக் கூறியுள்ளது. ஆகவே ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு ஒரு கோஷ்டி அனுப்பும்.

## பிரிட்டுக்கு கௌரவப் பட்டம்

பெர்லின், நவ. 8

பிரபல பிரிட்டிஷ் நியாய துரந்தரரான டாக்டர் டி. என். பிரிட் கியு. சி.க்கு 'க்களிடையே நட்பின் நட்சத்திரம்' என்ற கௌரப் பட்டத்தை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஜனுதிபதி லொல்ட்டர் ஊல்பிரிச் வழங்கினர். இந்தக் கௌரவப் பட்டம் பெரும்பாலும் வெளிநாட்டினருக்கே வழங்கப்படுகிறது. பிரபல ஆபிரிக்க-அமெரிக்க பாடகரான போல் ரொப்சன். டச் சினிமா டைரக்டர் பேராசிரியர் ஐவன்ஸ், சோவியத் எழுத்தாளர் ஷொலோகோல் ஆகியோருக்கு இதற்கு முன்பு இப்பட்டம் வழங்கப்பட்டுள்ளது (ஏ. டி. என்.)

## இந்தோனேஷிய மக்கள் வெற்றி

பெர்லின், நவ. 8

இந்தோனேஷியாவில் தற்போது நடைபெறும் சிக்கலான போராட்டத்தின் இறுதியில் இந்தோனேஷிய மக்களே வெற்றி பெறுவார்கள் என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு வெளிவிவகார அமைச்சின் உயர்தர அதிகாரி ஒருவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## நேபாள மந்திரி அல்ஜியர்ஸ் சேர்ந்தார்

காட்மாண்டு, நவ. 8

நேபாள வெளிநாட்டு மந்திரி திரு. கீர்த்திநிதாய் பிஸ்கா அல்ஜியர்ஸில் நடைபெறும் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்றையதினம்அல்ஜியர்ஸ் போய்ச் சேர்ந்தார்.

(பி.டி.ஐ.)

## ஏவுகணைத்தளங்கள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுமாரி

### வடக்கு வியட்னுமில் புதிய தாக்குதல்கள்

சைகோன், நவ. 8

அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் நேற்று வடக்கு வியட்னுமிலுள்ளஇரண்டு ஏவுகணைத் தளங்கள் மீது குண்டுமாரி பொழிந்து அவற்றை அழித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றுமிரு ஏவுகணைத் தளங்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க விமானங்கள் நேற்று மீண்டும் வடக்கு வியட்னுமில் தாக்குதல்கள் நடத்தின. நேற்றையத் தாக்குதல்களில் அமெரிக்க விமானங்களுக்குஅதிகஅளவு வெற்றி கிடைத்திருக்கிறது.

வடக்கு வியட்னுமிலுள்ள ஏவுகணைத் தளங்கள் மீது குண்டுகள்வீசித் தாக்குதல் நடத்திய அமெரிக்க விமானங்கள் பத்திரமாகத் திரும்பி வந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனுல் அமெரிக்க விமானமொன்று சுட்டு வீழ்த்தப்பட்டதென்றும் விமானி தப்பிவிட்டதாகவும்ஏதன்ஸ் செய்திகள் கூறுகின்றன. இதற்கிடையில் ஆறு அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகஹனேய் வானெலி அறிவிக்கிறது.

தென்வியட்னுமில் வியட்காங் கொரில்லாக்களுக்கும் தென்வியட்னும் அரசாங்க துருப்புகளுக்குமிடையே நேற்று நடைபெற்ற சண்டையில் ஐம்பது வியட்காங் கொரில்லாக்கள் கொல்லப்பட்டதாக சைகோன் வானெலி அறிவித்துள்ளது. ஆனுல் அமெரிக்க துருப்புகளுக்கும் வியட்காங் கொரில்லாக்களுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் அமெரிக்க தரப்பில் அதிகமான சேதமேற்பட்டிருப்பதாக வேறுசெய்திகள் கூறுகின்றன. தென்வியட்னுமில் ஒரு பகுதியில் வியட்காங்கினருக்கும் அரசாங்க துருப்புகளுக்குமிடையே தொடர்ந்து சண்டை நடைபெறுகிறது.

## ஐடிட்டின் படத்தை கம்யூனிஸ்டுகள் எரித்தனர்

ஜாகர்த்தா, நவ. 8

இந்தோனேஷியாவில்இதுவரை ஐயாயிரம் கம்யூனிஸ்டுகள் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் ஆட்சியைச் சேர்ந்த ஏராளமானவர் நேற்று நாட்டின் பல பகுதிகளில் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர்.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஐடிட்டின் படத்தை இவர்கள் எரித்ததாக ஜாகர்த்தா வானெலி அறிவித்தது. தங்களது (கம்யூனிஸ்ட்) அங்கத்தவர் கார்டுகளையும் இவர்கள் எரித்ததாக அறிவிக்கப்படுகிறது.

## அக்கவுண்டன்ட் மகாநாடு

புதுடில்லி, நவ. 8

புதுடில்லியில் இம்மாதம் 29-ம் திகதி நடைபெறவிருக்கும் ஆசிய பசிபிக் அக்கவுண்டன்ட் மகாநாட்டில் வெளிநாட்டைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டகணக்காளர் பிரிவில் நிபுணத்துவம் பெற்றவர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்திய கணக்காளர்களும் இம்மகாநாட்டில் கலந்துகொள்வர்.

(பி.டி.ஐ.)




விஞ்ஞானப் பெரியார்

## அலெக்சாந்தர் கிரஹாம்பெல்

— சி. சண்முகலிங்கம் —

இவர் 1849-ம் ஆண்டில் இங்கிலாந்திலுள்ள எடின்பரோ நகரில் பிறந்தார். இவரின் தந்தையாரான அலெக்சாந்தர் மெல்விபெல் ஒரு ஆசிரியராவார்; இவர் நூல்கள்பல எழுதியுள்ளார். கிரகாம்பெல் எடின்பரோ நகரிலுள்ள ஒரு கல்லூரியில் கல்வி பயின்று, லண்டன் சர்வகலாசாலையில் பி. எச். டி. (Ph. D.) பட்டப் பெற்ருர். பொஸ்டன நகரிலுள்ள ஓர் கல்லூரியில் பேராசிரியராகக் கடமையாற்றிய இவர் செவிடர்களைப் படிப்பிக்கும் முறையில் ஊக்கம் கொண்டு வெற்றியும் கண்டார்.

இவர் ஒருநாள் பொஸ்டன் நகரிலுள்ள ஒருகல்லூரியில் இருந்த விடுதிச்சாலையில் ஒருபக்கத்தில் இருந்து பேசியமொழுது கம்பியினுல் தொடுக்கப்பட்ட மறுபக்கத்தில் நின்ருேடுக்கும் ஒலி கேட்டது. ஆயினும் இந்நிகழ்ச்சியைப் பலர் நம்ப மறுத்துவிட்டனர். இதைப் பலடுக்கும் உணர்த்தவேண்டும் என்று எண்ணிய கிரகாம் பெல் ஒருநாள் ஒரு பொருட்காட்சியில் உபகரணங்களை அமைத்து இவர் ஒருபக்கமும், பிறேசில் நாட்டு மன்னர் மறுபக்கமுமாக இருந்து பேசினர். இதன்பின்னரே எல்லோரும் இதை நம்பினர். இவ்வுபகரணமே எல்லா வீடுகளிலும். வியாபாரஸ்தலங்களிலும், மற்றும் எல்லா இடங்களிலும் நாம் காணும் தொலைபேசி (டெலிபோன்) ஆகும். இவர் எடிஸன் என்பவர் ஆராய்ந்த சில ஆராய்ச்சிகளை தானும் ஆராய்ந்து ஒலிப்பதிவுக் கருவி (போனுகிருப்), அசையும் பாட்டியந்திரம், (போட்டோ போன்) என்பனவற்றையும் கண்டுபிடித்தார். 1922-ல் இவர் காலமானுர்.

## வால் நட்சத்திரம்

— ஆனந்தன் —

சுமார் ஒரு வருட காலமாக அதிகாலையில் கிழக்குப் பக்கமாக ஒரு வால் நட்சத்திரம்தோன்றுகிறது. எங்கும் இதுபற்றியேபேச்சு. இதனுல் பூமி அழியும் என்றும் சிலர் சொல்ல ஆரம்பித்துவிட்டனர்! இது வழக்கம் தான்! ஏதாவது புதுப் பொருள் தோன்றினுல் பூமி அதனுல் அழியும் என்று சொல்வது நம்மவர் வழக்கமாகிவிட்டது! இது ''கிக்யா செகி'' என்ற வால் நட்சத்திரமாக இருக்கலாம் எனச் சில விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வால் நட்சத்திரம் சூரிய குடும்பத்தைச் சேர்ந்தது. கிரகங்களைப் போலவே இவைகளும் திட்டவட்டமான பாதைகளில் கணக்குத் தவருது சுற்றி வருகின்றன. இவற்றின் பாதைகள் நீள்வட்டவடிவமானவை. சிலவற்றின் பாதைகள் பரவளையவடிவிலோ, அதிபரவளைய வடிவிலோ உள்ளன. இப்படிப்பட்டவை ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு ஒருமுறை சுற்றி வருகின்றன. இதுவரை சுமார் 800க்கு மேற்பட்ட வால் நட்சத்திரங்கள் அறியப்பட்டுள்ளன.

ஹேலி என்பவர் ஒரு வால்நட்சத்திரம் 75வருடங்களுக்கொருமுறை சுற்றும் என்று கூறினுர். இவ்வால் நட்சத்திரம் ஹேலி வால் நட்சத்திரம் எனப்படும். இவ்வால் நட்சத்திரம் 1910 ஆண்டில் தோன்றியது. மீண்டும் 1985ல் எதிர் பார்க்கலாம்! இதன் வால் 9 கோடி மைல் நீளமானது. 'எங்கி' வால் நட்சத்திரம் 3 வருடங்களுக்கொரு முறை சுற்றுகிறது. புரூக் என்ற வால் நட்சத்திரம் 39 வருடங்களுக்கொருமுறை சுற்றி வந்தது. பின் வியாழனின் கவர்ச்சியால் வேகங்கூடி 6 வருடங்களுக்கொருமுறை சுற்றுகிறது. சில வால் நட்சத்திரங்களுக்கு பல வால்களுமுண்டு.

வால் நட்சத்திரம் சூரியனுக்கருகில் வரும்போது தான் வால் தோன்றுகிறது. அதிலுள்ள வாயுக்களும், தூசிப் பொருட்களும் சூரியனது புறஊதாக்கதிர்களால் மின்னேற்றப்படுகின்றன எனவே இவை மறுபுறமாக வால் போன்று நீண்டு அழகாகக் காட்சியளிக்கின்றன;

## சி. ஐ. டி. ஷகான்

சுந்தரம்பிள்ளையின் வீடு டாக்டர் பஞ்சலிங்கம் கூறுகிருர்: ''நான் பிரேத பரிசோதனை நடத்தினேன். சுந்தரம்பிள்ளையின் வயிற்றில் நஞ்சு இருந்தது. இந்த நஞ்சு பாலில் கலக்கப்பட்டிருக்கிறது.'' மரணவிசாரணை அதிகாரி மனேகரன் கூறுகிருர்: ''விசாரணைகள் நடத்தினேன். யார் மீதும் சந்தேகப்பட இடமில்லை. தற்கொலையாகவிருக்கலாம் என்றே கருதுகின்றேன்''. பொலிஸ் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலம் சொல்கிருர்: வேலைக்காரன் வெங்கடாசலம் மட்டுமே அப்பொழுது வீட்டில் இருந்திருக்கின்ருன் சுந்தரம்பிள்ளைக்கு விரோதமானவர்கள் என்று கூறக் கூடியவர்களும் அச்சமயம் வீட்டில் இருக்கவில்லை. ஏதோ காரணத்துக்காக இவர் தற்கொலை செய்திருக்கின்ருர் என்றே சொல்லலாம்''. வேலைக்காரன் வெங்கடாசலம் சொன்னது: ''ஐயா நேற்றிரவு, ஐயா வழக்கம்போல சாப்பிட்டுவிட்டு படுக்கை அறைக்குப் போனுர். அவர் அறைக் கதவை காற்ருேட்டத்துக்காகஎப்பொழுதும் திறந்தே விடுவார். ஒவ்வொருநாளும் படுக்கை விரிப்பு மாற்றி புதிதாக போடுவேன். வழக்கம்போல நான் ஒரு கிளாஸ் பால் ஐயாவுக்கு நேற்றிரவு கொடுத்தேன். சாப்பாட்டு மேசையில்தான் பால் அருந்துவார். ஆனுல் நேற்றிரவு பால் கிளாஸை படுக்கை அறைக்குகொண்டுபோனுர். காலையில் ஐயாவைப் பார்க்கப்போனேன்...'' (ஓ ஓ... என்று அழத்தொடங்கிவிட்டான்.)

படுக்கை அறைத் தோற்றம்: ஒரு பக்கத்தில் அலுமாரி. அதற்குப்பக்கத்தில் கட்டில். அந்தப்புறத்தில் அழகான மேசை. அதற்கு மேலே எவ்வளவோ புத்தகங்கள். மற்ருெரு பக்கத்தில் நிலைக்கண்ணுடி. கட்டிலின் மீது புதிய 'பெட்ஷீட்' விரிக்கப்பட்டிருக்கிறது. புத்தம் புதிய தலையணை உறை போடப்பட்டிருக்கிறது. அதில் மாண்டு கிடக்கிருர் (கட்டிலில்) சுந்தரம்பிள்ளை. கட்டிலுக்கு பக்கத்தில் சிறிய மேசையொன்று. அதில் ஒரு கிளாஸ். கிளாஸில் சிறிதளவு பால். அதில் கொடூரமான விஷம் கலக்கப்பட்டதாகக்கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேசை மீது சில புத்தகங்கள் கிடக்கின்றன.

சி. ஐ. டி. ஷகான் கூறுகிருர்: ''இது ஒரு திட்டமிட்டகொலை. பாலில் விஷம் கொடுக்கப்பட்டது உண்மை இரவு சாப்பாடு முடிந்ததும் அவர் பால் அருந்தியிருக்கிருர். பாலில் யாரோ திட்டமிட்டு விஷம் கலந்திருக்கிருர்கள். அதிலே மாண்டுவிட்டார். பின்னர் இவரை அங்கிருந்து தூக்கிவந்து கட்டிலில் படுக்கவைத்திருக்கிருர்கள். இங்குள்ள சூழ்நிலையில் இது ஒரு திட்டமிட்ட கொலை என்பது நன்கு புலனுகிறது. வேலைக்காரன் வெங்கடாசலத்தைக் கைது செய்யுங்கள்''.

எல்லோரும் திகைக்கிருர்கள். வேலைக்காரன் கத்துகின்ருன். 'ஐயா நான்கொலை செய்யவில்லை' என்று அலறுகின்ருன்! சி. ஐ. டி. ஷகான் எந்தக் காரணத்தைக் கொண்டு இந்த முடிவுக்கு வந்தார் என்பதை உங்களால் கூறமுடியுமா? முடிந்தால் சனிக்கிழமைக்கு முன்னர் எழுதி அனுப்புங்கள்; விலாசம்: மாணவர் மலர், ஈழநாடு, த. பெ. 49. யாழ்ப்பாணம்.

## ஞாபகத்திற்கு ஒரு பரீட்சை

**வினுக்கள்**

1. ஈ. சீ. எம். என்பது எதைக் குறிக்கிறது?
2. மரக்குத்திக் குடிசை யாருடையது?
3. இலங்கையின் தேசிய கீதத்தை எழுதியவர்யார்?
4. உலகில் மழை கூடிய இடம் எது?
5. சீக்கிய மதத்தின் தந்தை யார்?
6. 'மிங்கலாடோன்' என்பது என்ன?
7. எகிப்தின் கடை எது?
8. 'இலகுவம்சம்' எழுதியது யார்?
9. 'குறவஞ்சி' எழுதியவர் யார்?

**விடைகள்**

1. ஐரோப்பிய பொதுச் சந்தையை.
2. ஆபிரகாம் லிங்கனுடையது.
3. ஆனந்த சமரக்கோன்.
4. சீருப்பூஞ்சி.
5. குருநானக்.
6. ரங்கூன் விமான நிலையம்.
7. நைல்நதி.
8. அரசகேசரி.
9. இராசப்பக் கவிராயர்.

தொகுப்பு: நெல்லை க. பேரன்.

ஃ

1. பீஜி நாட்டின் தலைநகர் என்ன?
2. நமுனுகுல மலையின் உயரம் எத்தனை அடி?
3. யான் ஓயா நதியின் நீளம் எத்தனை மைல்?
4. புருக்கள் மூலம் காலிக்கு தபால் போக்குவரத்து எந்த ஆண்டு நடைபெற்றது?
5. 1864ம் ஆண்டில் இலங்கையில் முக்கிய சம்பவமென்ன?

**விடைகள்**

1. சூலா.
2. 6,679 அடி.
3. 85 மைல்.
4. 1850ம் ஆண்டு.
5. முதலாவதுபுகையிரத வண்டி வந்தது.

தொகுப்பு: உ. சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்.

## மிக்கி மௌஸின் கதை

— நல்லை அமிழ்தன் —

வால்ட்டிஸ்னி ஒருசமயம் பத்திரிகைக் காரியாலயம் ஒன்றில் சித்திரக்காரராக வேலைசெய்துகொண்டிருந்தார். அப்போது சுண்டெலி ஒன்று அவர் அறைக்குள் இங்குமங்கும் குதித்து ஓடிக்கொண்டிருந்தது. நாள் முழுதும் அதையே வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்தார் டிஸ்னி. அன்று முதல் அந்தச் சுண்டெலி தினமும் அவர் அறைக்கு வந்துகொண்டிருந்தது. டிஸ்னிக்கு வேறு வேலையே ஓடவில்லை. ஒருநாள் அது அவர் சித்திரம் எழுதும் பலகைமீது குறுக்கும்நெடுக்குமாகப் பாய்ந்தது. உடனே டிஸ்னி அதைப் பிடித்து தூர எறிந்துவிட்டார். ஆயினும் டிஸ்னியினுல் சுண்டெலியை மறக்கமுடியவில்லை.

கடைசியாக அவர் ஹாலிவட்டுக்குச்சென்று ''காட்டூன்'' படத் தயாரிப்பில் ஈடுபட்டபோது அந்த சுண்டெலியின் உருவத்தையே தம்முடைய காட்டூன் நட்சத்திரமாக்க விரும்பினுர். அதற்கு ''மிக்கி மௌஸ்'' என்று பெயர் வைக்கும்படி யோசனை கூறினுர் அவருடைய மனைவி. முதலில் டிஸ்னி வரைந்த மிக்கி மௌஸ் அவ்வளவு கவர்ச்சியாக இல்லை. ஆனுல் மிக்கி மௌஸின் உருவத்தில் அழகும் கவர்ச்சியும் ஏற்பட்டன. அதற்கு பின்னர் பற்பல பிராணிகளைத் தம்முடைய ''காட்டூன்'' கதாபாத்திரங்களாக உருவப்படுத்தினுர். ''டிஸ்னிலாண்ட்'' என்ற பெயரில் மிகப் பெரிய ஸ்ரூடியோ ஒன்று அவருக்குச் சொந்தமாக இருக்கிறது.

## வாஞ்சிமலை

சுவையான தொடர் கதை. விரைவில் மாணவர்மலரில் வெளியாகிறது. கதையின் ஆரம்பதிகதியை அடுத்த வாரம் எதிர்பாருங்கள்.

## உழைப்பு

● உழைப்பால்தான் உயர்நிலையைப் பெறலாம். சோம்பேறியாக இருந்தால் உலகில் நாம் எவ்வாறு வாழ முடியும். — எடிசன்.

● ஊக்கம் காட்டி உழைப்பின், எத்தகைய அரிய வேலையும் எளிதில் குறுகிய கால அளவில் செய்து முடிக்கலாம்.— எடிசன்.

● உழைப்பவனிடமே கடவுள் இருக்கிருர் — எடிசன்.

" நாம் உலகில் பிறந்தது நம் வாழ்நாட்களை வீணுக்க அன்று. ஏதேனும் ஓர் அற்புத வேலையைச் செய்து அதனுல், உலகம் பயனடையவேண்டும் என்ற கருத்தோடுதான் கடவுள் ஒவ்வொருவரையும் படைத்திருக்கிருர். உங்களால் உலகம் சிறிதேனும் நன்மை பெறவேண்டும். இல்லாவிடின் நாம் உலகில் பிறந்து என்ன பயன்? — எடிசன்.

தொகுத்தனுப்பியவர்: சி. சண்முகலிங்கம், பிரதானவீதி, திருக்கோணமலை.

## பட் படார்

வேலைக்காரன்: ஐயா, சின்ன தம்பிக்கு பென்ஸ் கார் அடிச்சிட்டு...

சீட்டுகாரர்: அதை ஏனடா குளறிக்கொண்டு சொல்கிருய் சான்ஸ் தெரியாத பயலே!!

வேலைக்காரன்! இல்லைஐயா நிஜமாகவே தம்பிக்கு கார் அடித்து இரத்தம் ஓடுது!!

ஃ ஃ ஃ

ஆசிரியர்: ஆதிகால சரித்திரம் எப்படி?

மாணவர்: புதை சொல்லாதீர்கள் சார். அது பெரிய தரித்திரம்!!!

புளோறம்மா!- பெர்ஞண்டோ, சின்னக்கடை, மன்னுர்.



## ஐ. நா. உபகாரச் சம்பளம்

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் யந்திரப் பகுதி போமனுக' வேலை பார்க்கும் திரு. சு. தங்கராசா தானியங்கி எண்ணெய் யந்திர சாதனத்தில் பயிற்சி பெறுவதற்காக இத்தாலிதேசத்தின் தலைநகரான ரூறினுக்கு ஐ. நா. உபகாரச் சம்பளம்பெற்று அண்மையில் விமானமூலம்பயணமானுர், இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி' டிறிபேக் கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவராவர். உசனைச் சேர்ந்த விசுவநாதர் சுவாமிநாதரின் மகனுவார்.




## கொழும்பு

செவ்வாய் 9 - 11 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 சிறு கதை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நிலைய ஒலிப்பதிவுகள், 7-00 வயலின், 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர்விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

# விளம்பரம்

## பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி
டிஸ்திறிக் கோட்டில்
குஞ்சுப்பரந்தன் வல்லி
புரம் கிருஷ்ணபிள்ளை
வழக்காளி
இலக்கம் 2807/பி
எதிராக

1. குஞ்சுப் பரந்தன் தம்பு பாலசுந்தரம்
2. குஞ்சுப்பரந்தன் வல்லிபுரம் கைம்பெண் சிவக்கொழுந்து தனக்காகவும் பராயமற்ற 4-ம் 5-ம் 6-ம் எதிரிகளின் பராபரிப்புக்காரியாகவும்
3. குஞ்சுப்பரந்தன் சுந்தரம்பிள்ளை தில்லையம்பலம்

பராயமற்றவர்

,, 4. குஞ்சுப்பரந்தன்வல்லிபுரம் சிவராசா
,, 5. ,, வல்லிபுரம்செல்வராசா
,, 6. ,, வல்லிபுரம் சுந்தரராசா

7. கல் யல், சாவகச்சேரி செல்லத்துரை சுந்தரம்
8. குஞ்சுப்பரந்தன் இராமலிங்கம், வயித்திலிங்கம்
9. மனைவி பராசக்தியும்
10. குஞ்சுப்பரந்தன் செல்லத்துரை துரைராசா
11. சாவகச்சேரி வடக்கு பசுபதி முத்தையாவும்
12. மனைவி மலமும்
13. 'விக்நேஸ்வர வாசா' மீசாலை தெற்கு, மீசாலை, வேலு கந்தையா கைம்பெண் வள்ளியம்மை
14. கச்சாய் ரேட்டு, சாவகச்சேரி, பிள்ளையினர் பொன்னையா கைம்பெண் சின்னப்பிள்ளை
15. கச்சாய்ரேட்டு, சாவகச்சேரி பொன்னையா திருநாவுக்கரசு

எதிராளிகள்

குஞ்சுப்பரந்தனிறை நெற்பர. 260 கொண்டதும் கிழக்கு வாய்க்காலும், வடக்கு செ. சுந்தரத்துக்கும் பங்காளருக்கும், மேற்கு சு. வல்லிபுரத்தின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்கும் தெற்கு முடிக்குரியவாதனம் எனத்திக்குகள் பூண்டதுமான 'பெரியகமம்' அல்லது "சடைவைக்கியடி" அல்லது "கிளவித்தறை" என்னும் ஆதனத்தை 1951-ம் ஆண்டின் 16.ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது. இக்காணியில் உரிமைஉள்ளவர்கள் 1965ம் ஆண்டு கார்த்திகை மாதம் 12-ந் திகதி கோட்டில் உரிமையைக் கூறலாம்.

கோட்டாரின் கட்டளைப்படி

எஸ். கே. திரவியநாயகம்
வழக்காளியின்
நியாயதுரந்தரர்

சாவகச்சேரி
5-11-65. 1239




## வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், செவ்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 1-ம் 2-ம் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டப்போட்டிகளில் 1-ம் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரியும், 2-ம் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரியும் வெற்றிபெற்றன. முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டியில் சென். ஜோன்ஸ் வீரர்கள் சிறப்பாக விளையாடினர். குறிப்பாகச் சொல்லப்போனல் சென். ஜோன்ஸ் முன்னணி வீரர் மகாலிங்கத்தின் விளையாட்டு அருமையாக இருந்தது. எனினும் முதலாவது கோலை யாழ்ப்பாணக்கல்லூரியின் முன்னணி வீரர்கள் கவர்ச்சிகரமாக பந்தை மின்னல்வேகத்தில் கோலுக்குள் தள்ளினர். அதையடுத்து சென். ஜோன்ஸ் முன்னணி வீரரான விநாயகமூர்த்தி எதிர்ப்புற வீரர்களை ஏமாற்றி ஒருகோலை உதைத்துத் தள்ளினார். இடைவேளையின்போது இரு கோஷ்டிகளும் ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன.

இடைவேளைக்குப்பின் நடந்தபோட்டியில் சென். ஜோன்ஸ் மிகவும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டது. சென். ஜோன்ஸ் வீரர் மகாலிங்கம் 3 கோல்களைப் போட்டு ரசிகர்களின் பாராட்டுக்குள்ளானர். யாழ்ப்பாணக்கல்லூரி வீரர்கள் தம்மால் இயன்றவரை திறமையாக விளையாடினர்கள். போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் யாழ்ப்பாணக் கல்லூரியை 5—1 கோல்களால் தோற்கடித்தது.

1-ம் பிரிவுக்கான போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர்கள் பாராட்டத்தக்க முறையில் விளையாடினர். சென். ஜோன்ஸ் வீரர்களை பலமுறை படாதபாடுபடுத்தினர்கள். சென். ஜோன்ஸ் வீரருக்கு ஒரு 'பனல்ட்டி' கிடைத்தபோதும் அதை அடித்த சிவகுமார் 'கோட்டை'விட்டுவிட்டார். இடைவேளைக்குப்பின் சென். ஜோன்ஸ் வீரரான கணேசலிங்கம் ஒரு கோலை மிகவும் சாதுரியமாக அடித்தது பாராட்டுக்குரியதாகும். யாழ்ப்பாணக் கல்லூரி முன்னணிவீரர்கள்சுற்றிவளைத்து மீண்டும் ஒருகோலை உதைத்தார்கள். இருகோஷ்டியுமே இப்போட்டியில் திறமையாக விளையாடி நல்ல சுவையான போட்டியைக் கொடுத்தார்கள். இப்போட்டி முடிவில் யாழ்ப்பாணக்கல்லூரி சென். ஜோன்ஸ் கல்லூரியை 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

மேற்படி போட்டிகள் யாழ்ப்பாணக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றன,

## 1-ம் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரி; 2-ம் பிரிவில் சென். ஜோன்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், திங்கள்

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும், யாழ். இந்துக் கல்லூரிக்குமிடையில் 2-ம் முறையாக நடைபெற்ற 2-ம் பிரிவுக்கான உதைபந்தாட்டப்போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. 15 நிமிடங்கள் வரையும் சரியான போட்டி போட்டு மானிப்பாய் இந்து வீரர்கள் வெற்றிகரமாக முதலாவது கோலை இறக்கினர். சூட்டோடு சூட்டாக மற்றுமொரு கோலை மானிப்பாய் இந்துவீரர்கள் இறக்கினர்கள். ஆட்டம் விறுவிறுப்படைந்து கொண்டிருந்தது. ஒரு சில நிமிடங்களின்பின் யாழ். இந்து முன்னணி வீரர் இரகுநாதன் மிகவும் சாதுரியமாக ஒரு கோலைப் போட்டார். அதைஅடுத்து இந்து காப்டனை மகேந்திரராசாவும் வெற்றிகரமாக ஒரு கோலை மின்னல்வேகத்தில் உதைத்தார். இடைவேளையின்போது இரு கோஷ்டியும் 2—2 கோல்களைப்பெற்றிருந்தன. இடைவேளையின் பின் யாழ். இந்து வீரர் விஷ்ணுகாந்தனின் கவலையீனத்துக்குள்ளான பந்தை மானிப்பாய் வீரர்கள் தமது திறமையால் அதைகோலாக மாற்றினர். தொடர்ந்து யாழ். இந்து வீரர்கள் ஒரு கோலைப் போட்டனர். மானிப்பாய் இந்து வலது முன்னணி வீரரும், மத்திய முன்னணி வீரரும் கோல் காப்பு வீரரும் மிகவும் திறமையாக விளையாடினர். போட்டி முடிவில் இரு கோஷ்டியும் 3—3 கோல்கள்பெற்று வெற்றிதோல்வியின்றி போட்டியை முடித்தனர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற மேற்படி போட்டிக்கு திரு. கணேசலிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.







# வரி விளம்பரம்

### தேவை

யாழ்பாணத்திலுள்ள ஒரு அச்சுக்கூடத்திற்கு மெசினில் வேலை செய்வதற்கு ஒருவர்தேவை. கொம்போசிங் அனுபவம் உள்ளவராகவும் இருக்கவேண்டும். விண்ணப்பிக்கவும். இல. 1357 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 1357

காரியாலய நிர்வாகத்தில் 10 வருட அனுபவமுள்ள 35வயதிற்கு மேற்பட்ட ஒருவர் தலைமைக் குமாஸ்தாவாக (Chief Clerk) கடமையாற்றுவதற்கு தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 1351, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1351

கொழும்பில் மாலை தினசரி தமிழ் பத்திரிகைக்கும் ஒரு ஆங்கில வாரப் பத்திரிகைக்கும் ஆங்கிலத்திலும், தமிழிலும்பலபுஸ்தகங்கள் அச்சிடுவதற்கு தமிழிலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சிபெற்ற வாலிபர்கள் இருவர்தேவை. ஒவ்வொருவரும் ரூபா 1500 முதலீடு செய்தல் வேண்டும். எழுத்தில் விண்ணப்பம் செய்யவும். ஆசிரியர், அறை இல. 47 பிரிஸ்டல் கொட்டல், கொழும்பு-1. (Editor, Room 47 Bristol Hotel, Colombo-1.) 1328

### விற்பனைக்கு

வக்சோல் வெலக்ஸ் (Vauxhall Velox) EL 3303 இலக்க கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 46, பீச் ரேட், யாழ்ப்பாணம்.

### EDUCATIONAL

Only Few Vacancies Exist in our G. C. E. Ordinary Level Arts/Science/Commerce Classes Enrol Without Delay. United Institutes, Nelliady, Karaveddi/107 Pointpedro Road Nallur Jaffna. 1195

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


ஒட்டாவா, நவ 8

கனடாவில் இன்று பொதுத்தேர்தல் நடைபெற்றது கனடா பார்லிமெண்டுக்கு 265 அங்கத்தவர்களை ஒரு கோடி மக்கள் இன்று தேர்ந்தெடுக்கின்றார்கள். கடந்த எட்டுவருடகாலத்தில் நடைபெறும் ஐந்தாவது தேர்தலாகும்.

## போயாதினங்களில் "உத்தரதேவியை சேவைக்கு விடுக"

வவனியா, திங்கள்

பரந்தன் பிரயாணிகள் சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று அண்மையில் பிரயாணிகள் சங்கத்தின் தலைவர் திரு. க. இராமச்சந்திரனின் தலைமையில் நடைபெற்றபொழுது, காலை காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குச் செல்லும் 'உத்தரதேவியை' போயா தினங்களிலும் ஓடவிடவேண்டும்என்றுகோரும் தீர்மானம் நிறைவேறியது.

காங்கேசன்துறையிலிருந்து பளை புகையிரத நிலையத்துக்கு வந்து திரும்பும் புகையிரதங்களை கிளிநொச்சி வரைக்கும் விட்டு திரும்பும்படியும், கிளிநொச்சியில் பிரயாணிகள் தொகை அதிகரிப்பதாகவும் இதுசம்பந்தமாக உடனடியாக புகையிரத அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும்கோரும்பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டன.

## ஆசிரிய சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ்.

"ஆசிரியர்களின் நன்மையை முன்னிட்டு அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தால் 60-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் இன்று ஒரு லட்சம் ரூபாவுக்குமேல் வங்கியில் நிரந்தர வைப்புப்பணமாக வைத்திருப்பதைக்காண மகிழ்ச்சியடைகிறேன்" இவ்வாறு யாழ்ப்பாணம் பெரியகடை பாரதி பாஷிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற சங்கத்தின் 4-வது வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. இ. கந்தையா குறிப்பிட்டார். திரு. பொ. குமாரசுவாமி தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் வடஇலங்கைத் தமிழாசிரிய சங்கத் தலைவர் பண்டிதர் ச. பொன்னுத்துரை உரை நிகழ்த்தினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்; திரு.பொ. குமாரசுவாமி, உபதலைவர்கள்: திருவாளர்கள்: சா. சா. செல்யலோ, சீ. குஞ்சுத்தம்பி, காரியதரிசி: திரு. இ. செல்வராசா, உபகாரியதரிசி: திரு. ச. கந்தையா, தனதிகாரி: திரு. இ. வேலாயுதர்.

## விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன

டோக்கியோ, நவ. 8

ஐந்து அமெரிக்கவிமானங்களுட்படஒரு ஹெலிக்ஹாப்டரும் நேற்றுமுன் தினம் வடவியட்னமில் சுட்டுவீழ்த்தப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. (பி.டி.ஐ.)


மாவிட்டபுரம் குருக்கள் கூறுகிறார்கள்:
இறைவன் திருமேனியை
# சந்தனக்காப்பிட்டு
அலங்கரிக்கவும் பின் பிரசாதமாக
உபயோகிக்கவும் உகந்தது
உடன் அரைத்தெடுத்த சந்தனமாகும்.
அத்தகைய சுத்தமான
# பச்சை சந்தனம்
யாழ்ப்பாணம் 73, மின்சாரநிலைய வீதியிலுள்ள
சுந்தரம் பிறதர்ஸ்
ஸ்தாபனத்தில்
எப்போதும் வாங்கக்கூடியதாக ஒழுங்குசெய்திருப்பது
மிகவும் போற்றுதற்குரியதாகும்.

## தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி கூட்டம்

யாழ்ப்பாணம், திங்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியின் வண்ணுர்பண்ணை கமிட்டிக்கிளையின் நிர்வாக சபைக்கூட்டம் செல்வன் ச. செந்திராசா தலைமையில் சென்ற சனிக்கிழமை மாலை 6 மணியளவில் சிவன் பண்ணை வீதியிலுள்ள அதன் தலைமைக் காரியாலயத்தில் கூடியபோது, கொட்டடி பிச்ரேட் மக்களின் வீடில்லாப் பிரச்னையையிட்டு திரு ஜி.ஜி. பொன்னம்பலம் மூலமாக வாலிபமுன்னணி சமர்ப்பித்த மகஜரை ஏற்ற தொழில் வீடமைப்பு மந்திரி இதற்கான வீடமைப்பு திட்டமொன்றை உருவாக்கித் தருவதாக அளித்திருந்த வாக்குறுதியை மீண்டும் மந்திரிக்கு நினைவுறுத்தி இதனைத் துரிதமாக செயல்படுத்தவேண்டுமென மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அமைச்சர் பதவ் வகிக்கும் தமிழர் ஒருவர் அண்மையில் இந்துப் பல்கலைக் கழகத்தையிட்டுக் கூறிய கருத்துக்கள் பற்றி கண்டனத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டது.

திரு.ஜி.ஜி.யின் பிறந்த தினமான திங்கட்கிழமையன்று அவருக்கு ஒருவாழ்த்துச்செய்தி அனுப்புவதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## மரணம்பற்றி மேல் விசாரணைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், திங்.

மூன்று மாதத்தின் முன் சத்திரசிகிச்சை செய்யப்பட்ட ஒருவரின் மரணம் சம்பந்தமாக விசாரணைசெய்த மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்குவதைப் பின்போட்டு, இதுசம்பந்தமாக மேலும் விசாரணை செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த 45வயதானவைத்திவல்லியின் மரணவிசாரணையின்போதே, யாழ்ப்பாணம் மரண விசாரணை அதிகாரி திரு.ஏ. அமிர்தலிங்கம்மேற்கண்டவாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

ஐயம் கணபதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- நான் காலமானவரின் மைத்துனன். அவர் ஒரு வருத்தக்காரர். 3 மாதத்திற்கு முன்னுல் அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. சம்பவம் நடந்த தினம் இரவு 7 மணிக்கு தனது வயிற்றில் சுகமில்லையெனத் தெரிவித்தார். மறுநாள் காலை பார்த்தபோது அவர் இறந்து கிடந்தார். வாயில் இரத்தம் வடிந்திருந்தது, நான் இதைப்பற்றி சந்தேகப்படவில்லை,

## இருண்ட உலகம்

வாஷிங்டன், நவ 7

உலகில் கண்பார்வையற்றவர்களின் தொகை வெகுவாக அதிகரித்துக் கொண்டுசெல்கிறதென அறிவிக்கப் பட்டுள்ளது. உலகிலுள்ள கண்பார்வையற்றவர்களில் என்பது சதவிகிதத்தினரின் வியாதிக்கான காரணம் இன்னும் தெரியவில்லை.

(ராய்ட்டர்)

## வேலைக்கார சிறுமி கிணற்றுக்கு பலி

யாழ்ப்பாணம், திங்.

வேலைக்காரச் சிறுவர்கள் கிணற்றில் விழும் சம்பவம் யாழ்ப்பாணத்தில் அடிக்கடி நிகழ்கிறது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரணம். வேலைக்கு அமர்த்தப்பட்டபின் சிறுவர்களுக்கு ஆபத்தான வேலை கொடுக்கப்படுகிறது. ஏழு வயதான ஒரு சிறுமி அதுவும் கிணற்றில் தண்ணீர் அள்ளக் கூடாது, 30 அடி ஆழமுள்ளகிணற்றில், அரைவாசிக்கு மழை காரணமாக தண்ணீர் இருந்த சமயம் இது நடந்துள்ளது. சிறுவர்களை வேலைக்குஅமர்த்துவது பற்றி தொழில் கந்தோர் கவனித்து கட்டுப்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதியில் ஒருவீட்டின்வேலைக்கார சிறுமியாக இருந்த 8 வயதுஅன்னம்மாவின்மரண விசாரணையின்போது, மரண விசாரணை அதிகாரி திரு.ஏ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

அச்சிறுமியை வேலைக்கு அமர்த்திய ஜோர்ஜ் அரியநாயகம் சாட்சியத்தில் கூறியதாவது: காலமான சிறுமி 5 மாத காலமாக எங்கள் வீட்டில் இருந்தார். சம்பவம் நடந்த தினம் பிற்பகல் 2 மணிக்கு நான் நித்திரை செய்துகொண்டிருந்தேன். என்து மனைவி ஓடி வந்து, வேலைக்காரச்சிறுமி கிணற்றில் விழுந்து விட்டதாகக் கூறினுர். நான் ஓடிச் சென்று மகேந்திரன் என்பவரின்உதவியுடன் சிறுமியை வெளியில் எடுத்தேன். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றபோது டாக்டர் சோதித்து, சிறுமி இறந்து விட்டதாகக் கூறினுர்.

திருமதி மேரி அரியநாயகம்,சிறுமியின் தந்தை வேலன் கந்தன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

விபத்தினுல் ஏற்பட்ட மரணமெனமரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

உதைபந்தாட்டம்

## சென்.பற்றிக்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், திங்.

யாழ். மத்திய கல்லூரிக்கும், சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 1-ம், 2-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப்போட்டியில் சென்பற்றிக்ஸ் கல்லூரி இரு பிரிவுகளிலும் வெற்றியீட்டியது.

முதல் பிரிவு பேட்டியில், சென்பற்றிக்ஸ் கல்லூரி 1—0 கோல்களாலும், 2-ம் பிரிவுப்போட்டியில் 2—1 கோல்களாலும் மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது.

சென்பற்றிக்ஸ் விளையாட்டரங்கில் நேற்றுமாலைநடைபெற்ற மேற்படி போட்டிகளுக்கு திருவாளர்கள் சிங்கராயர், ஏகாம்பரம் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.


### விற்பனைக்கு

இரண்டு முதிர்ந்த வேப்ப மரங்கள் (பன்னிரண்டு அடி நீளம். ஐந்து அடிசுற்றளவு) உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்—சு.நடராஜா, வெங்கடேஷ் இரும்புச்சாலை, பலாலிவீதி, கோண்டாவில்.

1354


செட்டிகுளம்

## கொலைமுயற்சி வழக்கு எதிரி விடுதலை

வவனியா, திங்கள்

செட்டிகுளம் கொலை முயற்சி வழக்கு வவனியா மஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டபின் நீதிபதி திரு. ஏ. எஸ். எம். செனிவரத்ன எதிரியைவிடுதலை செய்தார்.

1965-ம்ஆண்டு ஜூலைமாதம் 17-ம் திகதி, இவ் வழக்கில் செட்டிகுளத்தில் வி. தர்மலிங்கம் என்பவர், ரி. குணரத்தினத்தை துப்பாக்கியினுல் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

காயமடைந்த ரி. குணரத்தினம் சாட்சியமளித்த போது கூறியதாவது:- எனது வயலில் நான் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தேன். எதிரி துப்பாக்கியுடன் வயலுக்கு வந்தார். நூறு அடி தூரத்திற்கு அப்பால் சென்று, என்னை நோக்கிச் சுட்டார். அந்தச் சூட்டினுல் எனது தோளில் காயமேற்பட்டது. நான் வயலில் விழுந்துவிட்டேன். அதன் பின் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு 3 வாரங்கள் இருந்தேன். சம்பவம் நடந்த பொழுது எனது சகோதரர்கள் மகேந்திரனும், பாலசிங்கமும் என்னுடனிருந்தார்கள்.

எதிரிசார்பில் ஆஜரான புறக்டர் ஏ அமிர்தலிங்கம் குறுக்கு விசாரணை செய்த போது, மகேந்திரனும், பாலசிங்கமும் தாங்கள் சுட்ட சம்பவத்தைக் காணவில்லையெனத் தெரிவித்தார்கள்.

## 'நாவலர் முத்திரை வெளியிடுக'

கிளிநொச்சி, திங்கள்

இவ்வாண்டு நாவலர் திருநாளின்போது நாவலர்பெருமானை போற்றத்தக்கமுறையில் நாவலர் முத்திரை வெளியிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்தீர்மானமொன்றை அரசாங்கக் கட்சிக்கூட்டத்தில் கிளிநொச்சிப் பாராளுமறை உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் சமர்ப்பிக்கவிருக்கிருர்.

இப்பிரேரணைக்கான முன்னறிவித்தலைத் திரு. இரத்தினம் ஏற்கனவே கொடுத்துள்ளார்.

## பொலிசாருக்கு ஐ. ஆர். ஸி. டிமிக்கி

பம்பலப்பிட்டி, திங்கள்

ஏழு பொலிஸ்காரர்கள் ஐ. ஆர். சி. ஒருவரை தப்பவிட்ட சம்பவம் பொறளையில் நிகழ்ந்துள்ளது. பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்ட ஐ ஆர் சி திடீரென ஒரு குண்டை நிலத்தில் வீசி மின்வேகத்தில் மறைந்துவிட்டார். இதனுல் பொலிசாரர் ஒருவருக்குக் காயமேற்பட்டது.

கருபா தோட்டத்திலுள்ள டாக்டர் ஒருவரின் வீட்டில் கொள்ளையடித்தது சம்பந்தமாக இக்குற்றவாளி பொலிசாரால் தேடப்பட்டு வந்தார்.

ஐ. ஆர். சி. தமது மனைவியுடனும், குழந்தையுடனும் வந்திருந்தபொழுதே இச்சம்பவம் நிகழ்ந்தது. குண்டு வெடித்தபின் ஐ. ஆர். சி. யின் மனைவியும் குழந்தையும் கூட மறைந்துவிட்டனர். குண்டு வெடியினுல் ஐ ஆர். சி.க்கும் காயம் ஏற்பட்டிருக்கலாமென பொலிசார் கருதுகின்றனர்.

ராவல்பிண்டி, நவ 7

லாகூர் முன்னணியில் வாஹா பகுதியில் பாகிஸ்தான் துருப்புகள் நேற்று ஆறு இந்திய துருப்புகளை சுட்டுக்கொன்றனர்,

(பி டி ஐ)

## வர்த்தகர்கள் சோதிக்கப்படுவர்

பம்பலப்பிட்டி, செவ்

உணவுப் பொருள்களைப் பதுக்கிவைத்திருப்பவர்களையும், அதிக விலைக்கு விற்பவர்களையும் திடீர் பரிசோதனைநடத்திக் கண்டுபிடிக்கவென கொழும்புக் கச்சேரியில் திடீர் பரிசோதனைக் குழுவொன்று உருவாக்கப் பட்டுள்ளது.

கொழும்பு அரசாங்க அதிபர் திரு டி. வி. மகதந்திலாவின் தலைமையில் இயங்கும் இக்குழு கொழும்பு மாவட்டத்தில் மட்டுமே வர்த்தகர்களைத் திடீர் பரிசோதனை நடத்தும்.

## அதிசயத் தேங்காய்

யாழ்ப்பாணம் செவ்வாய்

சாதாரணமான ஒரு தேங்காய் உடைத்துப் பார்த்ததில் அதற்குள் நான்கு பிரிவுகள்! அந்தத்தேங்காயின் உட்புறம் ஒரு சிரட்டையினுல் இரடாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது யாழ்ப்பாணம் கே கே எஸ் வீதியைச் சேர்ந்த திரு கந்தசாமியிடம் உள்ள இந்த அதிசயத் தேங்காயை பலர் பார்த்துச் செல்கின்றனர்

## பல்கலைக்கழகம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி

மலரில் பிழை கண்டுபிடித்துப் பண்டிதர்கள் தமது புலமையைப் பரிசோதிக்கிருர்கள். கவிஞர் சச்சிதானந்தத்தின் பெருமை இவர்களுக்குத் தெரியாததல்ல. அவர் ஓர் உண்மைக் கவிஞர். 6-ம் வகுப்புப்புத்தகத்தில் பிழை கூறுபவர்கள், இன்று ஜி. சி ஈ. வகுப்பில் போதிக்கப்படும் 'விபுலானந்த ஆராய்வு''பாரதச்சுடுக்கம்' முதலிய புத்தகங்கள் ஒன்றுக்கும் உதவாதவை; தமிழ் மாணவருக்கு சமஸ்கிருதம் போஸ்றவை என்பதை உணர்வார்களா? இப்புத்தகங்களை மாற்றியமைக்க வேண்டும் என்பதை ஏன் இவர்கள் எடுத்துக்காட்டவில்லை? இலங்கைப்பண்டிதர்கள் யாருக்காவது 'விபுலானந்த ஆராய்வு' விளங்குகிறது என்று கூறினுல் எழுத்தாளனுகிய நான் எனது தொழிலையே விட்டுவிடுகிறேன்'' என்று சவால் விட்டார்.


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### ஹாட்லி கல்லூரி

ஜி. சி. ஈ. (உயர்தரம்) ஆரம்பவகுப்புகள் (கலை / விஞ்ஞானம்): நவம்பர் மாதம் 13-ம் திகதி நடைபெறவிருந்த பிரவேசப் பரீட்சை ஒத்திவைக்கப் பட்டுள்ளது. விண்ணப்பதாரருக்கு பரீட்சைத் திகதியும் நேரமும் பின் அறிவிக்கப்படும்.

க. பூரணம்பிள்ளை,
அதிபர்

பருத்தித்துறை,
5-11-65

1244

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு

தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!

''நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''

எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.